# இந்தியா

கணவாய்களின் இருட்டில்
தண்டவாளங்களைச் சரிசெய்யும் தூசி மனிதர்கள்.
தட்டுத்தடவென எதிரொலி எழுப்பி ரயில் விரைகையில்
சுவரில் விலகி ஓடி ஒட்டிக் கொள்கையில்
பூர்வீகக் குகைச் சித்திரங்களாய்ச் சமைந்து போவார்கள்.
பாறையில் காய்ந்த கோரைப் புற்களாய்
செம்பட்டைப் படர்ந்த கேசம் கோதி
புகையிலை மென்ற சொத்தைப் பற்களால் சிரிப்பர்.
ஜோப்பட்பட்டிகளின் தகரக் குடிசைகளுக்குள் தூங்கும் பசி
தொழிற்சாலைகளின் ரசாயண சாக்கடைகளில்
நுரைகளாய் மிதக்கும்.
சர்ச் கேட் வாசலில் இரண்டு நாள் உண்ணாவிரதத்தில்
ஒளியிழந்து போன கண்களுடன்
இளைஞர்களின் கை கோஷ அட்டைகள் உச்சரிக்கும்
“நதிகளை தேசத்துக்குப் பொதுவாக்கு”.
ரிச்மாண்ட் சர்க்கிளின்
அடுக்குமாடி புறாக்களுக்குத் தெரிவதில்லை
மனிதர்களின் பசி. ---
– 80களில் மும்பை வாழ்க்கையில்
கிறுக்கி வைத்த கவிதை இப்போது
கண்ணில் பட்டது.

